**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், செங்கல்பட்டு**

**MCOP.No.127/2023 P.W.2**

(சாட்சிக்கு திரு.V.பிரதாப், உதவியாளர் அவர்களால் சாட்சி பிரமாணம் செய்யப்பட்டது)

| | |
|---|---|
| பெயர் | சரண்ராஜ் |
| த/பெ. | ஜெயகுமார் |
| வயது | 30 |
| வசிப்பிடம் | எண்.16, அம்பேத்கார் தெரு, லட்சுமிபுரம், திருவான்மியூர், சென்னை |
| தொழில் | மின்சார பணியாளர் |

**முதல் விசாரணை 11.02.2026**

நான் இந்த வழக்கில் கண்ணுற்ற சாட்சி. இன்று இந்த வழக்கில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

**2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

எனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் குறித்து எனக்கு தெரியும், அதில் உள்ள விவரங்கள் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது. கடும்பாடி கோவில் அருகில் விபத்து நடந்தது. விபத்து அன்று நான் சென்ற வாகனத்தின் எண். TN-07-AL-6832 ஆகும். விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண் 3335 ஆகும். இந்த விபத்தானது கிழக்கு கடற்கரை சாலையில் நடந்தது. விபத்து நடந்த இடம் 4 வாகனங்கள் செல்லக்கூடிய அகலமான ரோடு என்றால் அது ஒரு வழி பாதையாகும், சாலை பணி நடந்து கொண்டிருந்தது. விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிக்க அழைப்பானை வரவில்லை. மனுதாரர்கள் சொல்லி சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இந்த விபத்து குறித்து குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. இறந்துபோன நபா் சாலைவிதிகளை பின்பற்றாமல் வந்ததால், விபத்திற்கு முழுக்க, முழுக்க இறந்துபோன நபர் தான் காரணம் என்றும் சொன்னால்

சரியல்ல. நான் விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றும், மனுதாரர்களுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

**3 மற்றும் 4வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை

**மறு விசாரணை**

இல்லை